**படிவம் – 6**

**(அரசு முத்திரைத் தாளில் பெறவேண்டும்)**
**(பார்க்க விதித்தொகுப்புத் தொடர் 27(4)**

உரிமையாளரின் சம்மதக் கடிதம் இல்லாத நிலையில் இருப்பிடப் பொறுப்பாளர்
தரவேண்டிய காப்புறுதிப் பத்திரம்

இருப்பிட உரிமையில்லாமல் உரிமையாளர் சம்மதக் கடிதம் தராமல் விண்ணப்பிக்கும்
நுகர்வோர் தரவேண்டிய காப்புறுதிப்பத்திரம்

காப்புறுதிப் பத்திரம்

இரண்டாயிரத்து .................. ஆம் ஆண்டு ....................... மாத .................... ஆம் தேதியில் ............................................... என்ற இடத்தில் அலுவலகம், பணிமனை வைத்திருக்கும் அவகளின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி .................................காப்புறுதியாளர் எனப்படுபவர், அவர்கள் (இந்தச் சொல் அவரது செயலாளர்கள், ஆட்சியாளர்கள், வாரிசுகள் பிந்தைய உரிமையாளர்கள் அவரால் அமர்த்தப்படுபவர்கள் ஆகிய எவரையும் குறிக்கும் / உள்ளடக்கும்) ......................................................... என்ற (உரிமதாரரின் பெயரும், முகவரியும்), இனி உரிமதாரர் எனப்படும், நிறுவன அமைப்புடன் (இந்தச் சொல், இந்த அலுவலத்தில் பின்னால் பணிசெய்யப் போகிறவர்களையும் அமைப்பால் அமர்த்தப்படுபவர்களையும் குறித்து உள்ளடக்கும்) செய்துக் கொள்ளப்படும் காப்புறுதிப் பத்திரம்.

இதனால், இங்குக் குறிப்பிடப்படுவதாவது ........................................... என்ற இடத்தில் வாழ்ந்து வரும் திரு / திருமதி ..................................... அவர்களது மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி ................................... அவர்களுக்குச் சொந்தமான ........................... என்ற கதவிலக்க எண் உள்ள இருப்பிடத்தை, அவரிடமிருந்து நுகர்வோர் குத்தகைக்கு, வாடகைக்கு எடுத்துக் கொண்டுள்ளார் என்பதாலும்.

மேலும் இங்கு குறிப்பிடப்பட வேண்டுவதாவது நுகர்வோர் இருப்பிட உரிமையாளரை அணுகி தனது பேரில் தனது வணிகத்துக்காக மின்னிணைப்பு பெறுவதற்கான சம்மதக் கடிதத்தை எழுத்து வடிவில் தருமாறு கேட்டுக் கொண்டார் என்பதாலும்,

அதோடு இங்கு மேலும் குறிப்பிடப்படுவதாவது, அதற்கு, மேற் செப்பிய உரிமையாளர் நுகர்வோருக்குக் கிடைக்கவில்லை. அவரது / அவளது சம்மதக் கடிதம் நுகர்வோருக்கு எழுத்துமூலம் தர மறுத்துவிட்டார் என்பதாலும்,

மேலும் இங்குக் குறிப்பிடுவதாவது, எனவே காப்புறுதியாளர், உரிமதாரரிடம் தனது பெயரில் தரப்படும் மின்னிணைப்பால் ஏற்படும் இழப்புகளுக்குத் தானே காப்புறுதியேற்று அதற்காக நுகர்வோருக்குக் காப்புறுதிப் பத்திரம் எழுதித் தருவதன் பேரில் உரிமதாரரை நுகர்வோர் தனது பேரில் மின்னிணைப்பு தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அதோடு, மேலும் இங்கே குறிப்பிடப்படுவதாவது, தனதுபேரில் மின்னிணைப்பு தர மேற்சொன்னபடி ஒப்புக் கொண்டதைக் கருத்தில் கொண்டு, காப்புறுதியாளர், இதன் மூலம், உரிமையாளரின் சம்மதமின்றி, காப்புறுதியாளருக்கு மின்னிணைப்பு தருவதால் உரிமதாரருக்கு ஏற்படும் நடவடிக்கைகள், கோரல்கள், கேட்புத் தொகைகள், பணச் செலவுகள், இழப்பீடுகள் மற்றும் பிற செலவினங்கள் ஆகியவற்றுக்குக் காப்புறுதியாளரே காப்புறுதி தர இசைகிறார். மேலும் காப்புறுதியாளர் அசையும் மற்றும் அசையாத சொத்துகளாலோ, சொந்தமாக அவராலோ உரிமதாரருக்குச் செலுத்த வேண்டிய எவ்விதத் தொகையையும் செலுத்தவும் உறுதி ஏற்கிறார். ஒப்பந்தக் காலத்துக்குள், மின்னிணைப்பு இசைவுப் பத்திரம் முடிய நேர்ந்தால், ஏற்படும் கோரல் தொகைகள் எவ்வகையனவாயினும் அவை அனைத்தையும், மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்துடன், தான் கட்டியுள்ள கூடுதல் காப்பு வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்துக் கொள்ளவும் காப்புறுதியாளர் மேலும் இசைகிறார். மேலும், காப்புறுதியாளர் தனக்குத் தந்துள்ள மின்னிணைப்பை உரிமதாரர் துண்டிக்கவும், அதனால் காப்புறுதியாளரால் செலுத்தப்படாமல் எஞ்சியுள்ள நிலுவைகளை அவரது மின்னிணைப்பின் பேரில் சுமத்தவும் இசைகிறார் என்பதாகும்.

மேலே எழுதித்தரப்பட்ட பத்திரத்தின் கட்டுத் திட்டம் எப்படியென்றால், காப்புறுதியாளர் மேற்சொன்னபடி அனைத்து உறுதிகளையும் நம்பகத்துடனும் முழுமையாகவும் கடைப்பிடிக்கும்போது, மேல் உள்ள எழுத்துப் பத்திரம் செயல்படாது, மற்றபடி அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதாகும்.

திரு / திருமதி ................................................ என்ற காப்புறுதியாளர் மேற்சொன்ன ஆண்டில் குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட தேதியில், கீழ்வரும் சாட்சிகளின் முன்னிலையில் எழுதித்தந்துள்ளார்.

**கையொப்பமிட்டுத் தந்தவர்**
**கையொப்பம்**

முன்னிலை சாட்சிகள்
(பெயரும் முகவரியும்)

1.

2.